

# பிளாக் எம்பிராய்டரி

***இவை ரொம்ப அழகான வீட்டு அலங்கார எம்பிராய்டரி பேட்டன்கள் முதல் ஆடைங்க மற்றும் ஆக்சசரிகள் வரை நிறைய இருக்கு. இப்படி வேணும்னு நீங்க ஆசைப்பட்டீங்கன்னா அதை உஷா மெமரி கிராஃப்ட் ரேஞ்ச் மூலம் நீங்களே ஏன் உருவாக்கக்கூடாது?***



## தேவைப்படும் பொருள்கள்

மிஷினோட ரொம்ப பெரிய ஹூப்
அந்த ஹூப்-அவிட ஒரு அங்குலம் பெரிசா வெள்ளை பேஸ் துணி
நீங்க எடுத்துகிட்ட ஹூப் அளவுக்குள்ள பொருந்தற மாதிரி 5.5 அங்குலம் x 5.5 அங்குலம் லைனிங் துணி
நீங்க எடுத்துகிட்ட ஹூப் அளவுக்குள்ள பொருந்த மாதிரி 5.5 அங்குலம் x 5.5 அங்குலம் ஒரு சாடின் துணி
ஹூப்-அவிட ஒரு அங்குலம் பெரிசா கிளாஸ் நைலான் அல்லது ஆர்கன்சா துணி
2 வெவ்வேற கலர் நூல்
எம்ராய்டரி கட் பண்ற கத்தரிக்கோல்




எம்பிராய்டரி ஹூப் எடுத்துக்கங்க, அதை அன்லாக் பண்ணிகிட்டு உட்புற ஹூப்-அ நீக்கிருங்க. இப்ப வெளிப்புற ஹூப்ல துணிய வையுங்க, அதைத் தொடர்ந்து உட்புற ஹூப்லயும் வைக்கணும். துணி ஸ்ட்ரெச் பண்ண மறந்துராதீங்க அப்பதான் க்ரீஸ் எதுவும் இல்லாம எம்பிராய்டரி நேர்த்தியா இருக்கும். இப்ப ஹூப்-அ லாக் பண்ணிட்டு அப்றம் மேக்னடிக் கிளாம்ப்களால வீடியோல காட்டி இருக்கற மாதிரி அதை சரியான எடத்தில பொருத்திருங்க.




இப்ப உங்க உஷா ஜனோம் மெமரி கிராஃப்ட் ஸ்கைலைன் S9 தையல் மிஷன்ல இந்த ஹூப்-அ இணைச்சு அதை சரியான இடத்தில பாதுகாப்பா வையுங்க. டச் ஸ்கிரீனை இயக்க மிஷின்ல உள்ள ஸ்டைல்ஸ பயன்படுத்துங்க அப்றம் ஃபோல்டர் ஐகானை கிளிக் பண்ணி பேட்டன்களை தேந்தெடுங்க.





நாம உருவாக்கிட்டு இருக்கற பேட்டன் ஏற்கெனவே மிஷின்ல ட்ரைவ்லேந்து அப்லோட் செய்யப்பட்டிருக்கு ஆனா நீங்க ஆர்ட்டிஸ்டிக் டிஜிட்டலைசர் மென்பொருளைப் பயன்படுத்தி அழகான கஸ்டமைஸ்ட் பேட்டன்களையும்கூட உருவாக்கிக்கலாம்.




திரையில நீங்க ஹூப்போட பெயரையும் அதன் அளவு RE20a: 170x200 மிமீ, டிசைனோட அளவு 144x144 மிமீ, ஒரு நிமிஷத்துக்கு 700 தையல்ங்கறதையும் பாக்கலாம். நாம பயன்படுத்தும் கலர்களோட எண்ணிக்கை அப்புறம் எம்பிராய்டரிக்கு எடுத்துக்கிட்ட நேரம் இதுல ஏழு நிமிஷங்கள்


நிறத்தை ஒருதடவைக்கு ரெண்டு தடவையா செக் பண்ணிகிட்டு உங்களுக்கு வேணுங்கற நிறத்தை தேர்ந்தெடுத்திருக்குறத உறுதி செய்துக்கங்க.












அடுத்ததா, ஒரு வாடிங் எடுத்துகிட்டு அதுக்கு மேல சாடின் துணிய வையுங்க. ரெண்டு துணிகளையும் எம்பிராய்டரி ஹூப்க்கு மேல பிரஸ்ஸர் ஃபூட்-க்கு அடியில வையுங்க. அப்றம் டச் ஸ்கிரீக்கு போய் 'ட்ரேசிங் வித் டாக் ஸ்டிட்ச்' ஆப்ஷனை செலக்ட் பண்ணுங்க, இது அந்த மூணு மெட்டீரியல்களையும் ஒன்றா தற்காலிக தையலால ஹோல்ட் பண்ணிக்கும், இதை அப்புறமா ரொம்ப ஈசியா அகற்றிடலாம். ஸ்டார்ட் பட்டனை அழுத்திட்டு மிஷின் தானா தைக்கறதை ஜாலியா பாருங்க. ஆனா தைச்சிட்டு இருக்கறப்ப துணிய இறுக்கமா ஹோல்ட் பண்ணிட்டு இருக்கறதை மட்டும் உறுதிசெய்துக்கங்க.

இது முடிஞ்சதும், டாக் (tack) ஸ்டிட்ச் மெனுவை குளோஸ் பண்ணிட்டு பேட்டன் ஸ்கிரீனுக்கு மறுபடியும் போங்க. இப்ப முதல் ஸ்டெப், பூ வேலைப்பாடு டிசைன் உருவாக்கணும். ஸ்டார்ட்ட பிரஸ் பண்ணுங்க, மிஷின் தன் மாயஜாலத்தைக் கட்டிடும். நூலை கட் பண்ணுங்க. ஸ்டார்ட்ட பிரஸ் பண்ணுங்க. இப்ப நீங்க திரைலயே இது எப்படி போயிட்டு இருக்குன்னு பாக்கலாம். ரொம்ப சவுகரியம்தான் இல்லையா?

முதல் ஸ்டெப் முடிஞ்சதும், மிஷின் தானாவே நின்னுரும். அடுத்த ஸ்டெப்க்கு, ஹூப்-அ அன்லாக் பண்ணி மிஷின்லேந்து வெளிய எடுத்துருங்க. டிசைன் எவ்வளவு அருமையா இருக்குன்னு நீங்களே பாருங்க. ஆனா இது இன்னமும் முடியல. இப்ப நாம டாக் ஸ்டிட்ச்களை அகற்றணும், வீடியோல காட்டியிருக்கற மாதிரி சின்ன சின்னதா கட் பண்ணி அவற்றை வெளிய இழுத்துருங்க. இது முடிஞ்சதும், எம்ராய்டரிய சுற்றிலும் அதிகப்படியா உள்ள சாடின் சில்க் அப்றம் வாடிங்க கட் பண்ணிருங்க. கட் பண்றப்ப ரொம்ப கவனமா இருங்க, உங்க டிசைனுக்கு மேல கட் பண்ணிராதீங்க. சரியானபடி செய்ய ஒரு எம்ராய்டரி கத்தரிக்கோலை பயன்படுத்துங்க. இது கொஞ்சம் கஷ்டம்தான் அதோட கை நடுங்காம இதைச் செய்யணும்




கட் பண்ணி முடிச்சதும், கிளாஸ் நைலான் அல்லது ஆர்கன்சா துணிய எம்ராய்டரி மேல வெச்சு மேக்னடிக் கிளாம்ப்களால அதை சரியான இடத்தில வெச்சிருங்க. இந்தத் துணில நாம முதல் ஸ்டெப்ப மறுபடியும் செய்யணும். ஹூப்-அ மறுபடியும் பிரஸ்ஸர் ஃபூட்-க்கு அடியில சரியான எடத்தில வைச்சு லாக் பண்ணிட்டு, டச் ஸ்க்ரீன்ல கலர் 1-அ செலக்ட் பண்ணி ஸ்ட்டார்ட்-அ பிரஸ் பண்ணுங்க. எம்ராய்டரிய தொடங்கறதுக்கு முன்னால அதிகப்படியா உள்ள நூலை கட் பண்ண மறந்துராதீங்க.

பூ எம்ராய்டரி முடிஞ்சதும், மிஷின் தானாவே நின்னுரும். ரெண்டாவது ஸ்டெப்புக்கு போகறதுக்கு முன்னால நூல் கலரை மாத்தறதுக்கு இதுதான் சிக்னல். ஸ்ட்டார்ட்-அ பிரஸ் பண்ணிருங்க, மீதி வேலைய மிஷின் பாத்துக்கும்.







மூணாவது ஸ்டெப்புக்கு நாம மறுபடியும் நிறத்தை பச்சைக்கே மாத்திட்டு வெளிப்புற பார்ட்டரை மிஷின் தைக்கட்டும்னு விட்ரணும்

இந்த எல்லா ஸ்டெப்களும் முடிஞ்ச பிறகு, டச் ஸ்கிரீன்ல ‘ஹூப் ரிமூவிங்’ பட்டனை பிரஸ் பண்ணுங்க, எம்ராய்டரி ஹூப் லாக்கை, அன்லாக் பண்ணிட்டு அதை பிரஸ்ஸர் ஃபூட்டுக்கு அடிலேந்து எடுத்திருங்க. பாக்க எவ்வளவு அற்புதமா இருக்குல்ல? கடைசியா, மேக்னடிக் கிளாம்களை அகற்றிடணும், அவ்வளவுதான், வேலை முடிஞ்சுது.

அழகான பேட்டன்களை உருவாக்கறது 1,2,3 மாதிரி ஈசின்னு நாங்க சொன்னோம்ல? நாங்க உண்மையாத்தான் சொன்னோம். உஷா மெமரி கிராஃப்ட் ரேன்ஞ் எம்ராய்டரிய கஷ்டமே இல்லாம ஜாலியான விஷயமா செய்யுது. இப்ப நீங்க சுலபமா இந்த மாதிரி பிளாக்குகளை தைச்சு, மெத்தை கவர்கள், குவில்ட்கள் உருவாக்கி உங்க வீட்டின் தோற்றத்தையே மாற்றிடலாம்.